# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண். 406/2012**

பெயர்: **சம்பத்** நாள்: 10.03.2026

பி.வா.சா.3 – வாதி தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.3 – சம்பத் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.10

என்னுடைய சொந்த கிராம் எது என்றால், பூலாம்பட்டி. தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால், சங்ககிரியில் உள்ளது. நான் குடியிருக்கும் இடத்திற்கும் தாவா சொத்திற்கும் சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், சுமார் 40 கி.மீ தூரம் இருக்கும். தாவாவை யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், ராமசாமி நடராஜன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். ராமசாமியை எனக்கு எப்படி தெரியும் என்றால், தொழில் முறையாக எனக்கு தெரியும். எத்தனை ஆண்டுகளாக எனக்கு ராமசாமியை தெரியும் என்றால், சுமார் 30 ஆண்டுகளாக பழக்கம். ராமசாமியின் பூர்வீகம் எது என்றால், சங்ககிரி. ராமசாமியின் தகப்பனார் பெயர் என்னவென்றால், ஜம்புலிங்கம். ஜம்புலிங்கத்திற்கு எத்தனை வாரிசுகள் என்றால், 2 பேர் உள்ளனர். அவர்கள் பெயர் 1. ராமசாமி 2. நடேசன். ராமசாமி கூட பிறந்தவர்கள் 4 பேர் என்றும் வழக்கின் விவரம் பற்றி தெரியாமல் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. ராமசாமி உடன் பிறந்தவர்கள் 1. பூமலை 2. நடராஜன் 3. நடேசன் ஆவார்கள். ராமசாமியுடன் சேர்த்து மொத்தம் 4 பேர்கள் ஜம்புலிங்கத்தின் வாரிசுகள் ஆவார்கள். ராமசாமியின் பூர்வீகம் தேவண்ணகவுண்டனூர் கிராமம் மாரிமுத்தான் காடு என்பதுதான் அவரது பூர்வீகம் என்றும், நான் சங்ககிரி என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வழக்கு சொத்தின் சர்வே எண் என்றால், எனக்கு தெரியாது. அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால், 10200 சதுரடி ஆகும். அதில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால், 1 வீடு தான் கட்டியுள்ளார்கள். மீதி காலியிடத்தில் என்ன உள்ளது என்றால், காலியிடத்தில் சிமெண்ட் அட்டை போட்ட சாலை ஒன்று உள்ளது. காலியிடத்தில் வேறு ஏதும் இல்லை என்றால், ஒரு போர் உள்ளது மற்றும் தென்னைமரங்கள் உள்ளது. அது யாருக்கு சொந்தமான பாத்தியப்பட்ட இடம் என்றால், ராமசாமிக்கு பாத்தியப்பட்ட

இடம். நான் பத்திரத்தில் பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை. எப்படி எனக்கு 10200 சதுரடி உள்ளது என்ற விவரம் தெரியும் என்றால், நான் ராமசாமி உயிருடன் இருந்த சமயத்தில் நான் கேட்டபோது அவர் சொன்னார். அந்த 10200 சதுரடியில் ராமசாமிக்கு எவ்வளவு சதுரடி பாத்தியம் மற்றும் அவருடைய சகோதரர்களுக்கு எவ்வளவு சதுரடிகள் பாத்தியம் என்றால், ராமசாமிக்கு 10200 பத்திரப்படி பாத்தியப்பட்டுள்ளது என்று அவர் என்னிடம் சொன்னார். ஆனால் நான் பத்திரத்தை பார்க்கவில்லை என்றால், சரிதான். இதில் 5100 சதுரடி ராமசாமிக்கும் மற்றும் 5100 சதுரடி நடேசனுக்கும் பாத்தியப்பட்டுள்ளது என்றும் 2 பத்திரங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. 5100 சதுரடி ராமசாமிக்கும் மற்றும் 5100 சதுரடி நடேசனுக்கும் 2 பத்திரங்கள் மூலம் ஆக மொத்தம் 10200 சதுரடிகள் பாத்தியப்பட்டுள்ளது என்றும் வழக்கிற்காக நான் ராமசாமிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து வழக்கிற்காக சாட்சியம் சொல்வதற்காக அழைப்பாணை ஏதும் வந்ததா என்றால், இல்லை. என்னை சாட்சியம் சொல்வதற்காக யார் அழைத்து வந்தார்கள் என்றால், அழகம்மாள் என்பவர் அழைத்து வந்தார். அவர்கள் சொல்லிக்குடுத்தவாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால், இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் உள்ள விவரங்களை யார் தயார் செய்தது என்றால், அழகம்மாள் என்பவரின் வழக்கறிஞர் தான் தயார் செய்தார் அதில் நான் கையொப்பம் செய்தேன். இந்த வழக்கு சொத்து விவரங்களை பற்றி எனக்கு எதுவும் தெரியாமல் அழகம்மாள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள நடேசனை எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. அவர் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள வாதிக்காக பொது அதிகாரம் பெற்ற முகவர் சுரேஷ் என்பவரை எனக்கு தெரியாது. வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், வழக்கு சொத்து பற்றியும் எந்த விவரங்கள் தெரியாமல் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வடக்கு பக்கம் அழகம்மாள் என்பவரும் தெற்கு பக்கம் நடேசன் அனுபவித்து வருகிறார் என்றால், அழகம்மாள் என்பவர் மட்டும் குடியிருப்பது எனக்கு தெரியும். நடேசன் அமரிக்காவில் வசித்து வருகிறார் என்றும் அவர் வருடத்திற்கு ஒரு முறை தான் இந்தியா வருகிறார் என்றும் வருகிற காலத்தில் சங்ககிரியில் உள்ள தாவா சொத்தில்

தங்கியிருந்து விட்டு பின் தேவண்ணகவுண்டனூர் கிராமம் மாரிமுத்தான் காட்டிற்கு செல்வார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. வருடத்திற்கு ஒரு முறை இங்கு வரும்போது அவர் வீட்டு வரி, சொத்து வரி ஆகியவற்றை செலுத்தி வருகிறார் என்றும் அந்த வீட்டை அவர் அனுபவித்து வருகிறார் என்றும் அழகம்மாள் மட்டும் தனியாக தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்பது சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம்:</u> 11:40

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2026.03.10 17:46:14 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.